2017 ஜூன் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.

முற்பகல் 10–45

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் நல்லாசியுடன், ஈரோடு மாநகராட்சி மக்களின் நீண்ட கால கோரிக்கையான ஊராட்சிக் கோட்டை குடிநீர்த் திட்டத்திற்கு 550 கோடி ரூபாய் ஒதுக்கியும், ஈரோடு மாநகராட்சி மக்களின் 50 ஆண்டுக்கால கோரிக்கையாக இருந்த மேம்பாலம் கட்டுவதற்கு 58 கோடி ரூபாயும் ஒதுக்கி, 736 கோடி ரூபாய்க்கான திட்டப் பணிகள் மற்றும் உதவிகளையெல்லாம் தன்னுடைய பொற்கரங்களால் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொன்னார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1,520 வீடுகள் 130 கோடி ரூபாய் திட்டத்தில் கட்டித் தந்திருக்கிறார்கள். அதற்கும் அவர்களுக்கு நன்றியைத் தங்கள் வாயிலாகச் சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

பன்னோக்கு மருத்துவமனை

***4993—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதி, குரோம்பேட்டையில் நவீன வசதிகளுடன்கூடிய பன்னோக்கு மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பல்லாவரம் தொகுதி, குரோம்பேட்டையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசினுடைய சார்பிலே உடனடியாக 10 கோடி ரூபாய் செலவிலே விபத்துக் காய சிகிச்சை மையமும், 50 இலட்சம் ரூபாய் செலவிலே Cardiac Care Unit–*இருதய நோய்க்கான சிறப்பு சிகிச்சை மையமும் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் உடனடியாகத் தொடங்கப்பட இருக்கின்றன என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் தலைவர் கலைஞர் அவர்களால் குரோம்பேட்டை அரசு பொது மருத்துவமனை தொடங்கப்பட்டது. ஆனால், அதற்குப்பிறகு 2006–2011 ஆம் ஆண்டுக் காலத்தில்தான் அந்த மருத்துவமனையில் பல்வேறுபட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு; அவசர விபத்து சிகிச்சைப் பிரிவுகளும், மகப்பேறு மருத்துவப் பிரிவுகளும் அமைக்கப்பட்டன. கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் நான் பேசியபோது என்னுடைய கருத்தாக இதனை நான் தெரிவித்தேன். கடந்த காலத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளெல்லாம், சென்னையை நோக்கிச் செல்கின்ற ஓர் அவல நிலை ஏற்பட்டது. அந்த மருத்துவமனையில் பொதுப் பணித் துறையின் வாயிலாக மண் அடித்து தளத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தேன். நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக செய்து தருவதாகச் சொன்னார்கள். ஆனால், இதுநாள் வரை அது செய்யப்படவில்லை. ஆகவே, இப்போது புதிய அறிவிப்பை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்; உண்மையிலேயே 10 கோடி ரூபாய் செலவில் பல்வேறு வசதிகளுடன் விபத்துக் காய சிகிச்சை மையம் அறிவிக்கப்பட்டிருக்குமானால், அந்தப் பகுதி மக்களுடைய சார்பாக*

2017 ஜூன் 14]

உளப்பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அந்தப் பன்னோக்கு மருத்துவமனையில் இந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும்? எப்போது முடிவுறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே தொடர்ந்து இதே கோரிக்கையை வலியுறுத்தினார்கள். அதைத் தொடர்ந்துதான், துறைரீதியாக கருத்துருக்கள் வேகமாகப் பெறப்பட்டது. சட்டமன்றத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பிலே அறிவிக்கின்ற எந்தத் திட்டமும் நிச்சயமாகத் தொடங்கப்படும்; எனவே, நிச்சயமாக பணிகளை முடித்து அது திறக்கப்படும் என்ற நல்ல தகவலை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, விழுப்புரத்திற்கும்— சென்னைக்கும் மத்தியிலே இருக்கும் இந்தக் குரோம்பேட்டை மருத்துவமனையை எடுத்துக்கொண்டு அதிநவீன விபத்துக் காய சிகிச்சை மையம் அமைக்க 10 கோடி ரூபாய் நிதி பெறப்பட்டிருக்கிறது. அதிலே 5.24 கோடி ரூபாய்க்கு* High end Equipments; *இரண்டே முக்கால் கோடி ரூபாயில்* C.T. Scan, *50 இலட்சம் ரூபாய் செலவில்* C.Arm *உள்ளிட்ட கருவிகளெல்லாம் வாங்க டெண்டர் போடப்பட்டிருக்கிறது. 4 கோடியே 18 இலட்சம் ரூபாய்க்கு புதிய கட்டடங்கள் மருத்துவமனைக்காக கட்டுவதற்காக கருத்துருக்கள் பெறப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. விரைவாக அந்தப் பணிகளெல்லாம் முடிக்கப்பட்டு, 10 கோடி ரூபாய்க்கு அதி நவீன வசதிகளுடன் பன்னோக்கு விபத்துக் காய சிகிச்சை மையம் குரோம்பேட்டை மருத்துவமனையிலே திறந்துவைக்கப்படும் என்ற நல்ல தகவலை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, Cardiac Unit; *யாருக்கேனும்* heart attack *வந்துவிட்டால் உடனடியாக* stabilise *செய்யக்கூடிய சிறப்பு நவீன* Cardiac Care Unit*—ஐ அமைப்பதற்கு குரோம்பேட்டை மருத்துவமனையைத் தேர்வு செய்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்திலே அதற்கான நிதி ஒப்புதலைக் கொடுத்திருக்கிறார்கள்.*

அதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னை புறநகர்ப் பகுதியிலே யாருக்கேனும் heart attack ஏற்பட்டால், உடனடியாக குரோம்பேட்டை மருத்துவமனையிலே stabilise செய்யப்பட்டு, அதற்குப் பிறகு அங்கிருந்து stent or CABG செய்து சென்னையில் உள்ள மருத்துவமனைக்கு வருவதற்கான அதிநவீன வசதிகளும் குரோம்பேட்டை மருத்துவமனையிலே செய்யப்படுகின்றன.

மழை வெள்ளம் குறித்து நான் ஏற்கெனவே உங்களுக்கு உறுதி அளித்திருந்தேன். உங்களுக்கே தெரியும். நீங்கள் பார்த்திருப்பீர்கள். நுழைவாயிலிலே அந்த arch பொதுப் பணித் துறை மூலமாக உயர்த்திக் கட்டப்பட்டிருக்கிறது. இனிமேல் மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படாது. அதைத் தொடர்ந்து compound wall strengthen செய்வதற்கு உரிய மதிப்பீடு பெறப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சட்டமன்றத்திலே கொடுத்த வாக்குறுதிகள்மீது விரைவாக, வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணிகள் அனைத்தும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சார்பிலே செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

முற்பகல் 10—50

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனை, ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கு நடுவில் அமைந்திருக்கிற ஒரு பெரிய மருத்துவமனை ஆகும். அந்தப் பக்கம் செங்கல்பட்டிற்குச் செல்வதற்கு 35 கி.மீ. தூரமும், சென்னைக்கு வருவதற்கு 25 கி.மீ. தூரமும் பயணிக்க வேண்டும். எனவே, ஐந்து சட்டமன்றத் தொகுதிகளில் வசிக்கக்கூடிய மக்கள்தான் அங்கு வருகிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் இதேபோன்ற கருத்துகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்து வருகிறீர்கள். எனவே, நடப்பாண்டிலேயாவது நிச்சயமாக அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகளை முடித்துவிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நாங்களும் உங்களுக்கு அழைப்பு கொடுத்து, நிச்சயமாகத் திறந்து வைப்போம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலாகத்தானே சொல்லியிருக்கிறார்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கூடங்குளத்தில் மிகச் சிறந்த மருத்துவமனையை தமிழக அரசு அமைத்திருக்கிறது. அதற்காக தமிழக அரசைப் பாராட்டுகிறேன். அதேவேளையில், அங்கு உயர்தர சிகிச்சைகளுக்கான கருவிகள் எல்லாம் நிறுவப்பட்டிருக்கின்றன. ஆனால், போதிய பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை என்ற ஒரு குறை அங்கு இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிவர்த்தி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வள்ளியூரில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைத்துத் தரவேண்டும். அதேபோன்று, திசையன்விளையில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று எனது தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடருக்கும், இப்போது இந்தக் கூட்டத்தொடருக்கும் நடுவிலே மட்டும்— ஏற்கெனவே 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள்.

இந்த இரண்டு சட்டமன்றக் கூட்டத்தொடருக்கும் நடுவிலே மட்டும்—3 ஆயிரம் பேர், அதாவது VHN என்கிற கிராம சுகாதார செவிலியர்கள் 1,200—க்கும் மேற்பட்டவர்கள்; அதேபோல மருத்துவர்கள், Dark Room Assistants உள்ளிட்ட Para medical staff 3 ஆயிரம் பேர், M.R.B. மூலமாக, அதாவது, மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்று, நாளை, நாளை மறுநாள் என இந்த வாரம் முழுக்க புதிய மருத்துவர்கள் நியமனத்திற்கான கலந்தாய்வு நடந்துகொண்டிருக்கிறது. இந்த வாரத்திலே அனைத்துப் பணி நியமனங்களும் முடிந்ததற்குப் பிறகு, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து மருத்துவமனைகளிலும் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற மருத்துவமனை உள்பட, எம்.பி.பி.எஸ். மருத்துவர்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களும் நிரப்பப்பட்ட மாநிலம் என்ற நிலையை தமிழ்நாடு எய்தும் என்ற நல்ல தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள். (குறுக்கீடு) நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். அமைதியாக இருங்கள். முதலில் சபையிலே பேரவைத் தலைவருக்குக் கட்டுப்படுங்கள். உங்களுக்கு வாய்ப்பு வரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார், நீங்கள் பேசுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி ரொம்ப தள்ளி இருக்கிறது. மக்கள் எல்லோரும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நாங்குநேரி தொகுதியில் நல்ல மருத்துவமனை இருக்கிறது; நல்ல மருத்துவர்கள் இருக்கிறார்கள். அங்கு தேவையான கருவிகள் வேண்டும். ஒருவர் இறந்துவிட்டாலோ அல்லது விபத்து ஏற்பட்டாலோ, அறுவை சிகிச்சை செய்வதற்கு திருநெல்வேலிக்குத்தான் செல்லவேண்டியிருக்கிறது. திருநெல்வேலி மருத்துவமனையில் மருத்துவ வசதிகள் அனைத்தும் நன்றாக இருக்கின்றன. அதேபோன்று, நாங்குநேரியில் உள்ள மருத்துவமனையின் தரத்தை உயர்த்தி, எல்லாவிதமான கருவிகளும் அங்கிருந்தால், ஏழையெளிய மக்கள் மிகவும் சந்தோஷமாக, உடம்பை சரிசெய்துகொண்டு அவரவர் வீட்டிற்குச் செல்வார்கள். நாங்குநேரி தொகுதியை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பார்க்க வேண்டும். தெற்கில் இருந்து வந்திருக்கிறோம். எனவே, கொஞ்சம் கருணை காட்டும்படி அன்புடன் நான் கேட்டுக்கொள்கிறேன்.

2017 ஜூன் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மருத்துவமனை சிறப்பாக இருக்கிறது என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பாராட்டியதற்கு நன்றி. திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை* Multi Super Speciality Hospital *ஆகத் தரம் உயர்த்தப்பட்டு, உயர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல,* Higher centre*–ல் தேவையான அனைத்து உபகரணங்களுடன் கூடிய வசதி இப்போது சிறப்பாகச் செய்யப்பட்டு வருகிறது. கடந்த முறை தாங்கள் சார்ந்திருக்கக்கூடிய கட்சியினுடைய உறுப்பினர் நம்முடைய காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருந்தார்கள். நாங்கள் எப்படி குரோம்பேட்டை மருத்துவமனையை விபத்துக் காய சிகிச்சை மையமாகத் தரம் உயர்த்துகின்றோமோ—அண்ணன் அவர்களுக்கும் நல்ல தகவல்—அதேபோல காரைக்குடியிலும் அதே தொகையில் விபத்துக் காய சிகிச்சை மையமாக இந்த ஆண்டு அந்த மருத்துவமனையை உயர்த்துவதற்கு ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. அதேபோலதான், பல்லாவரத்திற்கும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் அனைத்து அதிநவீன வசதிகளும் செய்து தரப்படும். இப்போது குரோம்பேட்டை மருத்துவமனைக்கு* C.T. Scan *வழங்குவதைப்போல, வருங்காலத்திலே நாங்குநேரி மருத்துவமனைக்கும் தேவைப்படுகின்ற உபகரணங்கள் நிதி நிலைமைக்கேற்ப வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***5250—திரு. அம்மன் கே. அர்ச்சுணன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—